## தலைப்பு 328 - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 328 - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2023 மே 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபடிப்புகள், உள்ளகக் கட்டுப்பாட்டிலான நலிவகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்திக்கு அமைய 2017 ஆம் ஆண்டு முதல் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் நிதி ஏற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்துதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு எல்லைகளை விஞ்சி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட கூடாத போதிலும் 04 செலவின விடயங்களுக்கு உரிய ரூபாய்.1,204,997 ஆன நிதியேற்பாட்டினை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | வருடாந்தம் உள்ளபடியான செலவினங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லையினை விஞ்சி செல்லாத வகையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்தப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டுக்கு ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டும் என்பதுடன் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது எனவும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானி இலக்கம் 1640/31 இன் பிரகாரம் தொழில் தொடர்புகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் மனிதவளம் மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம் 2010 ஜனவரி 01 ஆம் திகதி நிறுவப்பட்ட போதிலும் அதன் அடிப்படையில் நோக்கமான ‘‘மனிதனும் மற்றும் வேலை | வருடாந்தம் நிகழ்ச்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் கொள்கைகள் உருவாக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ளதுடன் மீண்டும் திருத்தி அமைப்பதற்கு உரிய பதில்கள் கிடைக்கப் பெறவில்லை. | நிறுவனம் தாபிக்கப்பட்டமைக்கான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாய்ப்புக் கொள்கையினை தயாரித்து நடைமுறைப்படுத்தல்'' எனும் அடிப்படை நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு 2022 ஆம் ஆண்டு வரையிலும் முடியாது இருந்தது. | | |
| (ஆ) | திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய கிராமிய சந்தை தகவல்களை சேகரிக்கும் நடைமுறையை நிறைவேற்றுவதற்கு தகவல் கட்டமைப்பொன்று (One system software) உருவாக்குவதற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.1,700,000 ஆன நிதி ஏற்பாடு திணைக்களத்தின் வலைதளத்திற்காக மற்றும் சர்வர் கட்டமைப்பிற்காக ரூபாய். 672,900 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த தகவல் கட்டமைப்பினை நிர்மாணிக்கும் பணியை நிறைவேற்ற முடியாததாக காணப்பட்டது. | Smart Sri Lanka செயல்திட்டம் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படவில்லைல. | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரெக்கியா பியச நிகழ்ச்சி திட்டத்தின் கீழான கொரியா குடியரசின் வேலைவாய்ப்புக்கள் மற்றும் தொழில் அமைச்சினால் கொரியா - இலங்கை கொள்கை மதியுரை நிகழ்ச்சி திட்டத்திற்கு உரிய செயற்திட்டம தொழில் வாய்ப்பு கொள்கை மற்றும் தொழிற்சந்தையை சுழற்சிக்குள்ளாக்கும் குறிப்புகள் மக்கள் தொழில் வாய்ப்பு சேவை ஒழுங்கமைப்பினை ஏற்படுத்தல், வியூகம் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடைமுறைகளை பரிமாற்றிக் கொள்ளல் ஆகிய துறைகளின் கீழ் 2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது | செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவரத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. | டிசயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயன் முன்னேற்ற அறிக்கையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

. இச் செயற்திட்டத்தின் பொருத்தமான தன்மை தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஊடாக செயன் முன்னேற்ற அறிக்கை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் செயல் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தினை அடைந்திராமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தொழிற்சந்தை தகவல்களை சேகரிப்பதை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி செயலகத்தினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட இளைய மனிதவள தரவு வங்கி ஒன்றினை நிறுவும் செயல்த்திட்டத்தின் (ஸ்மார்ட் ஸ்ரீ லங்கா செயற்திட்டம்) செயன் முன்னேற்றம் தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய கட்டமைப்பின் மூலம் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாமையால் மென்பொருள் ஒன்றினை நிறுவுவதற்கு நிறுவும் நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டளவில் திணைக்களத்தினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபாய். 84,082,617 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கணினி உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு மேற்படி செயற்திட்டத்தின் கீழ் ரூபாய்.83,582,617 செலவிடப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய பல்வேறு இடர்களின் காரணமாக பொதுவாக பொதுமக்களினை போன்றே அரச நிறுவனங்களுக்கும் தாக்கம் ஏற்பட்டுள்ளமை. | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த பெறுபேறுகளை (Outcome) பெற்றுக்கொண்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழிலை எதிர்பார்த்துள்ளோர் தொடர்பிலான தகவல்களை சேகரித்தல் மற்றும் தொழில் வாய்ப்பு வழங்குதல் தொடர்பில் 2018 - 2022 வகையான காலப்பகுதியில் ரூபாய்.11,372,667 ஆன நிதிக் கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தொழிலை எதிர்பார்த்து உள்ளோரை தொழில்களில் ஈடுபடுத்தல் 10 - 16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அந்த தொழில்களில் ஈடுபடுத்தலை பரீட்சிக்கும் நடைமுறை ஒன்று இல்லாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய பல்வேறு நெருக்கடிகள் காரணமாக மக்களைப் போன்றே அரச நிறுவனங்களும் தாக்கத்திற்குள்ளாகியுள்ளமை . | தொழிலை எதிர்பார்த்து உள்ளோர் தொடர்பிலான தகவல்களை சேகரித்தல் மற்றும் தொழிலில் ஈடுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கையின் புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மூலம் அரச தொழில் வாய்ப்பினை வலுப்படுத்துவதற்கான செயல்திட்டத்திற்காக மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்திற்கு ரூபாய்.6,066,000 ஆன தொகை சர்வதேச தொழிலாளர் சங்கத்திலிருந்து (ILO) வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாட்டினை செலவிட்டு தேசிய இளைஞர் படையணி மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து அரச சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் செயல் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் தொழில் வாய்ப்பினை வலுப்படுத்துவதற்கு வழங்கிய நன்கொடை தொகை தொடர்பில் இளைஞர் படையணி மற்றும் திணைக்களம் பங்காளராக செயல்பட்டுள்ளது. | நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயன்முன்னேற்றம் பின் தொடரப்பட வேண்டும். |

### 3.5 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிகவும் செயல் திறன் ஆன சேவையினை வழங்கும் நோக்கில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பிற்காக ரூபாய்.4,933,440 ஆன நிதி ஏற்பாடு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) நிறுவனத்தினை தெரிவு செய்யும் போது கூறு விலைகள் கோருதல், கமா கூறுவிலை திறத்தல் ஆகியவற்றில் உரிய ஆவணங்கள் நிறைவு செய்யப்பட்டிராமை, நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட விதம் மற்றும் அடிப்படை தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.<br><br>(ii) 2021 டிசம்பர் மாதம் அளவில் இரு கட்டங்களின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இக்கட்டமைப்பின் மூலம் திட்டங்களை தயாரித்தல், தொழில்நுட்ப சந்தைகளின் தகவல்களை தயாரித்தல், விடுமுறை பதிவேடுகளை தயாரித்தல், தனிப்பட்ட கோவைகளை தயாரித்தல், பயிற்சி நடவடிக்கைகள், செலவின முகாமைத்துவம், வாகன முகாமைத்துவம் மற்றும் இடமாற்றல் முகாமைத்துவம் போன்ற பிரிவுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலும் எதிர்பார்த்த தகவல்களை கட்டமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் மற்றும் சிக்கலான நிலைமையின் அடிப்படையில் அலுவலக நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமையால் தாமதமாகியுள்ளது. | தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பினை நிறுவுவதற்கும் நிறுவி அதனை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(iii) தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பினை தயாரித்து நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி குறிப்பிடப்பட்டிராததுடன் திட்டவட்டமான காலச்சட்டகம் ஒன்று இல்லாதிருந்தமையால் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமான நிதி அல்லாத சொத்துக்களை பகிர்ந்தளிக்கும் போது 2019 ஜனவரி மாதம் முதல் உரிய பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு வெளியிடப்பட்டிருந்த கட்டளைகளின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபாய்.4,457,864 பெறுமதியான சொத்துக்களுக்கான பெறுவனவு கட்டளைகள் 2023 பெப்ரவரி மாதம் வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | பெறுவனவு கட்டளைகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுவனவு கட்டளைகளை பெற்றுக்கொண்டு சொத்துக்களின் உரித்தினை தீர்ப்பனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2021 ஜனவரி 29 ஆம் திகதி திணைக்களத்திற்கு கிடைத்திருந்த நிசான் ரக மினி வான் வண்டியினை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பதற்காக ரூபாய்.497,791 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பதிவு செய்யும் பணிகளை மேற்கொள்ள முடியாமையால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடு கிடைக்காத காரணத்தால் பதிவு செய்ய முடியாது போய் உள்ளது. | சொத்துக்களை சுவீகரித்தல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 3.7 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)(ஊ) பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பின் கீழ் உள்ளக கணக்காய்வு பணி உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடைமுறைகள் உள்ளமை தொடர்பில் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் உள்ளக உத்தியோகத்தர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டமையால் அப்பணியை உரிய முறையில் இடம்பெற்றுள்ளதா என்பது பிரச்சனைக்குரியதாக காணப்பட்டது. | வெற்றிடங்களுக்கான கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் முன்னுரிமை கிடைக்கவில்லை. | உள்ளக கணக்காய்வினை வலுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |